# முடிவுரை

**'வித்யாசாகரின் கனவுத் தொட்டில் (நாவல்) - ஓர் ஆய்வு'** என்னும் இவ்வாய்வின் மூலம் ஆய்வுரைப் பகுதிகளில் பெறப்பட்ட ஆய்வு முடிவுகள்:

நாவல், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், மக்களின் தமிழர் சமூகத்தில் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதாரப் பண்பாட்டு மாற்றங்களே அடிப்படையாக அமைந்துள்ளன.

காதல், இறை நம்பிக்கை, குடும்பம், திருமணம், விபச்சாரம், விவாகரத்து போன்ற இன்றைய சமூகச் சிக்கல்களையும் சமூக உண்மைகளை அறிந்து கொள்வதற்கு இந்தக் கனவுத் தொட்டில் நாவல் பயன்பட்டுள்ளது. ஏனெனில், எழுத்து வடிவ இலக்கியங்கள் சமூகத்தை நன்கு தெளிவுப்படுத்தும் ஆற்றல் பெற்றுள்ளன என்பது இந்நாவலின் மூலம் உண்மையாகிறது.

இன்றைய சமுதாயத்தில், நிலவும் சில சிக்கல்களைச் சுட்டிக் காட்டுவதோடு, தீர்வும் தருகின்ற நாவலாகக் கனவுத் தொட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளது. வித்யாசாகரின் கனவுத் தொட்டில், நடப்பியல் நிலையில் சமூகத்தில் மக்கள் எதிர்க்கொள்ளும் வாழ்வியல் சிக்கல்களையும், போராட்டங் களையும், மனிதப் பண்புகளையும், மனித நேயத்தையும் மையமாகக் கொண்டே அமைந்துள்ளது.

கனவுத் தொட்டில் நாவல் மூலம் தனிமனிதனின் வாழ்க்கை முறையைக் கொண்டே சமூக ஒழுங்கும், குடும்ப அமைப்பும் மனித நேய வளர்ச்சியும் அமையும் என்று எடுத்துரைக்கக் காண முடிகிறது.

இன்றைய காதலர்களின் போக்கும் நடப்பியல் செயல்பாடுகளும் சமூக முன்னேற்றத்துக்கு எந்த நன்மையையும் செய்யாது என்று கருதும் வேளையில், இலக்கிய மற்றும் வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிவிட்டு, நடைமுறை ஆராய்ந்து கொண்டு, எதிர்கால நன்மைக் கருதி இடத்திற்கு ஏற்றார்போல் முடிவெடுக்கத் தக்கதாகவே காதல் மற்றும் காதலர்கள் இருக்கையில் முழுமையாக இச்சமுதாயத்தைக் காதல் செம்மைப்படுத்தும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் செம்மைப்படுத்தும் வலிமைக் காதலுக்கு உண்டு என்று கருதுகிறார்.

கடவுள் பற்றி, நாவலாசிரியர் சிந்தித்த பல கோணங்களைக் கனவுத் தொட்டில் மூலம் எடுத்துரைத்து, வாசிப்போருக்கு இறைச் சிந்தனையைத் தூண்டியுள்ளார்.

ஒரு குடும்பத்தின் வெளிச்சம் என்பது ஒரு தேசத்தின் நன்மைக்கான முதற்புள்ளி என்றுரைக்கும் வித்யாசாகர், பெற்றோர்களுக்கான அன்பையும் மரியாதையையும் நாம் கொடுக்கத் தவறக்கூடாது என்கிறார். பெற்றோர்கள், தான் பெற்ற மகன், மகள் என்றாலும் சமுதாயப் பார்வையோடு அணுகுவதும், அவர்களின் உணர்வு புரிந்து செயல்படுவதும், எது அவர்களுக்கு நன்மையை நல்குமோ அதை அவர்களுக்குப் புரியும்வண்ணம் எடுத்துரைத்து நல்வழிபடுத்தி ‘மானுட சுகத்தை நல்ல பண்போடும் மதிப்போடும் அடைந்து வாழுமாறு எடுத்தியம்புவதும் நல்ல பெற்றோரின் கடமையாகும்’ என்று வலியுறுத்தியுள்ளார்.

வெண்மதிவாணன் வைஷ்ணவி என்ற பாத்திரத்தினால் அவர்களின் திருமண வாழ்க்கையில் விவாகரத்து எண்ணத்தைத் தோற்றுவித்து, இறுதியில்

வெண்மதிவாணன் மனம்திருந்தியவனாகவும், வைஷ்ணவிக்கு விவாகரத்து முடிவு தன்முனைப்பாக எடுக்கப்படாமலிருப்பதும், நீதிமன்றம் வரை சென்றாலும், அவனே குடும்பச் சிக்கலுக்கான தீர்வுகளையும் நீதிமன்றத்தில் தெளிவாக எடுத்துரைத்து மக்களிடம் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் பாத்திரமாகப் படைக்கப்பட்டிருப்பது நாவலாசிரியரின் உத்தியாகிறது.

நவீன விபச்சாரம், பாதுகாப்பான விபச்சாரம் என்ற கருத்தோடு ஒன்றுபடாத வித்யாசாகர், விபச்சாரம் சமூகத் தீமையே என்கிறார். ஒரு விபச்சாரி தான் செய்துவந்த விபச்சாரத் தொழிலிருந்து தன் தவற்றை உணர்ந்து அத்தொழிலில் இருந்து விடுபட்டுச் செல்கிறாள் என்று வித்யாசாகரால் படைத்திருப்பது வரவேற்க தக்கதாக உள்ளது. அந்தப் பெண் மட்டுமன்றி விபச்சாரம் செய்யும் ஒவ்வொரு பெண்ணும் இந்த நாவலைப் படித்தால் நிச்சயம் விபச்சாரத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வாள் என்றே நம்பலாம்.

விபச்சாரத்துக்கு முக்கியக் காரணம் வறுமைதான் என்று சொல்லப்படுகிறது. வறுமை நிலையிலிருந்து விடுபட்டுத் தங்களாலும் மற்றவர்களைப் போல் வாழ முடியும் என்ற நம்பிக்கை வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு ஏற்படும் வகையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். அவ்வாறு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால், 'ஒரு வேலை உணவாவது வேண்டும்' என்ற பசிக் கொடுமையின் கட்டாயத்தால் தவறான வழியில் சென்றவர்கள் கூட நல்ல வழிக்கு மாறித் தன் வாழக்கையைச் செம்மையாக அமைத்துக்கொள்வர் என்ற கருத்து முன் வைக்கப்படுகிறது.

வித்யாசாகர் மேலைநாட்டில் வேலை பார்த்து வரும்போதும் தேவையில்லாமல், தனக்கு ஆங்கிலப் புலமை இருக்கிறது என்று காட்டிக் கொள்ளவோ, கல்லூரி மாணவர்கள், நீதிபதிகள், செய்தி சேகரிப்பாளர்கள் உரையாடும்போதும்கூட ஆங்கில நடையைத் தவிர்த்துச் செந்தமிழ் நடையிலேயே உரையாட விட்டு இருப்பது, தமிழ் மொழியின் தனித்துவத்தை அடையாளப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

வித்யாசாகரின் இந்நாவலில் கனவு உத்தியே முதல்பாதியாக அமைந்துள்ளதும், அடுத்தப் பாதி, பாத்திரத்தின் உண்மை வாழ்க்கையைப் படம்பிடித்தும் காட்டும் மொழிநடை தனித்துவம் வாய்ந்ததாக உள்ளது.

மேலாய்வுக் களன்கள்:

1. வித்யாசாகரின் படைப்புகளில் இறைச் சிந்தனைகள்
2. வித்யாசாகரின் படைப்புகளில் சமூகச் சிக்கல்கள்
3. வித்யாசாகரின் படைப்புகளில் சமூகத் தீர்வுகள்
4. வித்யாசாகரின் கவிதைகளில் மானுட மதிப்புகள்

என்ற தலைப்புகளில் மேலாய்வு செய்ய இவ் ஆய்வின் மூலம் முன்மொழியப் படுகின்றது.